இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 287 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – வைகாசி 14 – புதன்கிழமை 28 மே 2025 – வெளியூர் 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 287 : Thiruvalluvar Year - 2056 - Vaikasi 14 - Wednesday 28 May 2025 - Dak 12 Pages ₹ 5.00





புதுப்பிக்கப்படுவதற்கு முன்



புதுப்பிக்கப்பட்ட பின்

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (27.5.2025) கொளத்தூரில் நடைபெற்ற நிகழ்ச்சியில், 1 கோடியே 47 இலட்சம் ரூபாய் செலவில் மேம்படுத்தப்பட்ட ஜெனரல் குமாரமங்கலம் குளம் மற்றும் பூங்காவினை பொதுமக்களின் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார். இந்நிகழ்வின்போது, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் டாக்டர் கலாநிதி வீராசாமி, கிரிராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, அ. வெற்றியழகன், ஜோசப் சாமுவேல், துணை மேயர் மு. மகேஷ்குமார், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மருத்துவர் க.மணிவாசன், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ. குமரகுருபரன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.




தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (27.5.2025) கொளத்தூரில் நடைபெற்ற நிகழ்ச்சியில், அனிதா அச்சீவர்ஸ் அகாடமியில் பயிற்சி முடித்த 350 மாணவ, மாணவியர்களுக்கு தையல் இயந்திரங்கள், 131 மாணவ, மாணவியர்களுக்கு மடிக்கணினிகள் மற்றும் 100 பயனாளிகளுக்கு கண்ணாடிகளை வழங்கினார். இந்நிகழ்வின்போது, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் டாக்டர் கலாநிதி வீராசாமி, கிரிராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, அ.வெற்றியழகன், ஜோசப் சாமுவேல், அனிதா அச்சீவர்ஸ் அகாடமியின் தலைமை நிர்வாக அதிகாரிகள் நரேந்திரன் மற்றும் திருமதி. ஹெலன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உடனிருந்தனர்.

## மாணவ – மாணவியர்க்கு கல்வி உபகரணங்கள் – நல உதவிகள் வழங்கினார்!

# ரூ.118.33 கோடியில் மூத்த குடிமக்களுக்கு 3 உறைவிடங்கள்!

## கொளத்தூர் தொகுதி நிகழ்ச்சியில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார்!

**சென்னை, மே 28-**

**கொளத்தூரில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மொத்தம் ரூ.118.33 கோடி மதிப்பில் 3 மூத்த குடிமக்கள் உறைவிடங்களுக்கு அடிக்கல் நாட்டி, மேம்படுத்தப்பட்ட ஜெனரல் குமாரமங்கலம் குளம் மற்றும் பூங்கா, மேம்படுத்தப்பட்ட தணிகாச்சலம் நகர் கால்வாய் ஆகியவற்றை திறந்து வைத்து, பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.**

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (27.5.2025) கொளத்தூரில் நடைபெற்ற நிகழ்ச்சியில், இந்து சமய அறநிலையத் துறை சார்பில் 22.61 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மூன்று மூத்த குடிமக்கள் உறைவிடங்கள் கட்டுமானப் பணிக்கு அடிக்கல் நாட்டி, 4.36 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்பட்ட ஜெனரல் குமாரமங்கலம் குளம் மற்றும் பூங்கா, 91.36 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்பட்ட தணிகாச்சலம் நகர் கால்வாய் ஆகியவற்றை திறந்து வைத்தார். மேலும், கொளத்தூர் பகுதியைச் சேர்ந்த பத்து மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு பொதுத் தேர்வுகளில் அதிக மதிப்பெண்கள் பெற்ற மாணவ, மாணவியர்களுக்கு பரிசுகள், 150 மாற்றுத்திறனாளிகளுக்கு இணைப்பு சக்கரங்கள் பொருத்தப்பட்ட ஸ்கூட்டர்கள், அனிதா அச்சீவர்ஸ் அகாடமி மாணவ, மாணவியர்களுக்கு தையல் இயந்திரங்கள் மற்றும் மடிக்கணினிகளையும், பயனாளிகளுக்கு கண்ணாடிகளையும் வழங்கினார்.

**இந்து சமய அறநிலையத் துறை சார்பில் மூன்று மூத்த குடிமக்களுக்கான உறைவிடங்கள் கட்டுமான பணிக்கு அடிக்கல் நாட்டுதல்!**

கொளத்தூர் தொகுதிக்குட்பட்ட ராஜாஜி நகரில் நடைபெற்ற நிகழ்ச்சியில், இந்து சமய அறநிலையத்துறை திருக்கோயில்கள் சார்பில் கொளத்தூர், பழனி மற்றும் பாளையங்கோட்டை ஆகிய இடங்களில் கட்டப்படவுள்ள மூன்று மூத்த குடிமக்களுக்கான உறைவிடங்களின் கட்டுமானப் பணிகளுக்கு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

2021-2022 ஆம் நிதியாண்டிற்கான இந்து சமய அறநிலையத்துறை மானியக் கோரிக்கையில், "சென்னை, பழனி, திருநெல்வேலி ஆகிய இடங்களில் மூத்த குடிமக்களைப் பேணிப் பாதுகாக்க மூத்த குடிமக்கள் உறைவிடங்கள் அனைத்து வசதிகளுடன் தொடங்கப்படும்" என்று அறிவிக்கப்பட்டது.

இந்த அறிவிப்பினை நிறைவேற்றிடும் வகையில், அருள்மிகு தேவி பாலியம்மன் திருக்கோயில் மற்றும் அருள்மிகு இளங்காளியம்மன் திருக்கோயில் சார்பில் 8.88 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கொளத்தூரில் 27,525 சதுரடி கட்டட பரப்பளவில் 75 மூத்தக் குடிமக்கள் பயன்பெறும் வகையிலும், திண்டுக்கல் மாவட்டம், பழனி, அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் சார்பில் 8.48 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பழனியில் 38,750 சதுரடி கட்டட பரப்பளவில் 100 மூத்தக் குடிமக்கள் பயன்பெறும் வகையிலும், திருநெல்வேலி மாவட்டம், அருள்மிகு நெல்லையப்பர் திருக்கோயில் சார்பில் 5.25 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பாளையங்கோட்டையில் 15,473 சதுரடி கட்டட பரப்பளவில் 50 மூத்தக் குடிமக்கள் பயன்பெறும் வகையிலும், மூன்று மூத்தக் குடிமக்களுக்கான உறைவிடங்களின் கட்டுமானப் பணிகளுக்கு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

இந்த மூத்தக் குடிமக்கள் உறைவிடங்களில் வரவேற்பறை, குளியலறை மற்றும்

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (27.5.2025) கொளத்தூரில் நடைபெற்ற நிகழ்ச்சியில், 1 கோடியே 47 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 150 மாற்றுத்திறனாளிகளுக்கு இணைப்பு சக்கரங்கள் பொருத்தப்பட்ட ஸ்கூட்டர்களை வழங்கினார். இந்நிகழ்வின்போது, நீர்வளம் மற்றும் சட்டத் துறை அமைச்சர் துரைமுருகன், இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் டாக்டர் கலாநிதி வீராசாமி, கிரிராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, அ. வெற்றியழகன், ஜோசப் சாமுவேல், துணை மேயர் மு. மகேஷ்குமார், சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி. ரஷ்மி சித்தார்த் ஜகடே, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

## உலகளாவிய பயங்கரவாதத்திற்கு எதிராக

# ஸ்லோவேனியா நாடு இந்தியாவோடு நிற்கிறது!

## லுப்லியானாவில் கனிமொழி கருணாநிதி எம்.பி. பேட்டி!

**லுப்லியானா, மே 28 -**

**ஸ்லோவேனியா தலைநகர் லுப்லியானாவில் இந்தியாவின் சார்பில் சென்றுள்ள நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி பேட்டியளிக்கும் போது, "உலகளாவிய பயங்கரவாதத்திற்கு எதிராக ஸ்லோவேனியா நாடும் இந்தியாவோடு நிற்கிறது" என்று குறிப்பிட்டுள்ளார்.**

பஹல்காமில் கடந்த ஏப்ரல் 22ம் தேதி நடந்த பயங்கரவாத தாக்குதலை தொடர்ந்து, இந்தியா மேற்கொண்ட ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கை, இந்தியா, பாகிஸ்தான் இடையிலான மோதல் குறித்து சர்வதேச நாடுகளுக்குத் தெளிவாக விளக்குவதற்காக அனைத்துக் கட்சி எம்.பி.க்கள் உள்ளடக்கிய 7 குழுக்கள் உருவாக்கப்பட்டன. அந்த குழுக்கள் பல்வேறு நாடுகளுக்கும் பயணித்து ஆபரேஷன் சிந்தூர் குறித்து இந்தியாவின் நிலைப்பாட்டை எடுத்துரைத்து வருகின்றன.

அதில், தி.மு.க. துணைப் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி தலைமையில் ஒரு எம்.பி.க்கள் குழுவினர் லுப்லியானாவிற்கு சென்றுள்ளனர். திங்களன்று (26.5.2025) ஸ்லோவேனியா தலைநகர் லுப்லியானாவுக்கு சென்ற கனிமொழி கருணாநிதி தலைமையிலான அனைத்துக் கட்சி எம்.பி.க்கள் குழு, பயங்கரவாதத்திற்கு எதிரான இந்தியாவின் நிலைப்பாடு, ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கை உள்ளிட்டவை பற்றி ஸ்லோவேனியா நாட்டு அரசு பிரதிநிதிகளிடம் எடுத்துரைத்தனர்.



மேலும், ஸ்லோவேனியா நாடாளுமன்ற வெளிநாட்டுக் கொள்கை குழுத் தலைவரான பிரெட்ராக் பாகோவிச் மற்றும் இந்தியா - ஸ்லோவேனியா நாடாளுமன்ற நட்புறவு குழுவின் உறுப்பினர் மிரோஸ்லாவ் கிரெகோரிச் ஆகியோரை எம்.பி.க்கள் குழுவினர் சந்தித்து விரிவான ஆலோசனைகளை மேற்கொண்டனர். அந்த சந்திப்பின்போது, பஹல்காம் தாக்குதல் குறித்தும், ஆபரேஷன் சிந்தூர் குறித்தும் இந்திய எம்.பி.க்கள் குழுவினர் விரிவாக விளக்கங்களை அளித்தனர்.

மேலும், பயங்கரவாதத்திற்கு எதிரான இந்தியாவின் உறுதியான மற்றும் சகிப்புத்தன்மை இல்லாத நிலைப்பாடு, போன்ற விஷயங்களை நாட்டின் ஒருமித்த கருத்தாகத் தெரிவித்தனர்.

பிறகு செய்தியாளர்களைச் சந்தித்து கனிமொழி கருணாநிதி எம்.பி. கூறியதாவது,

ஸ்லோவேனியா நாடு மிகவும் வலுவான ஆதரவாளராக உள்ளனர். அவர்கள் எப்போதும் அமைதியை ஆதரித்து வருகின்றனர், மேலும் பயங்கரவாத செயல்களுக்கு எதிராக எப்போதும் நிற்கிறார்கள். உலகளாவிய பயங்கரவாதத்திற்கு எதிராக ஸ்லோவேனியா எங்களுடன் நிற்கும் என்ற நேர்மறையான உணர்வுடன் நாங்கள் திரும்பிச் செல்கிறோம். மேலும், ஐநா பாதுகாப்பு கவுன்சிலில் (UNSC) இந்தியா எதிர்பார்ப்புகளைப் பற்றிய விவாதங்கள் நடைபெறும் போது, அவர்கள் இந்தியாவுடன் நிற்பார்கள் என்பதிலும் நம்பிக்கை இருக்கிறது.

நாங்கள் மிகவும் தெளிவாகக் கூறியிருக்கிறோம். பொறுப்புணர்வு இல்லாமல், பேச்சுவார்த்தை மேசைக்குச் சென்று இந்த முரண்பாட்டைத் தீர்க்க முடியாது. பயங்கரவாதத்தை ஆதரிக்கும் ஒரு நாட்டுக்கும், இந்தச் செயல்களைச் செய்பவர்களுக்கும் இடையில் எங்களால் வேறுபடுத்திப் பார்க்க முடியாது.

இன்று, நாங்கள் சந்திக்கும் போது, இந்தியாவில் என்ன நடக்கிறது என்பதைக் குறைந்தபட்சம் அவர்கள் அறிவார்கள். ஆனால் ஒரு பிரதிநிதிகள் குழு வந்து அவர்களிடம் உண்மைகளை முன்வைக்கும்போது, நாம் என்ன அனுபவிக்கிறோம் என்பதைப் பற்றி ஆழமாக புரிந்துகொள்கிறார்கள்.

இவ்வாறு அவர் பேட்டியளித்தார்.